பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 4 சனிக்கிழமை 17-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 88

மங்கையரின் அழகுக்கு
மேலும் அழகூட்டும்
தங்க நகைகளை 22கரட்டில்
பெற்றிட இன்றே நாடுங்கள்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1603)

## பேச்சுக்கான காலம் நெருங்குகிறது

★ இந்திய வெளியுறவு அமைச்சர்

# ஜஸ்வந்சிங்-எரிக்சோல் சந்திப்பு

# பேச்சுத் திகதியில் புலிகள் இணக்கம்

### நோர்வே தூதரக அதிகாரி தெரிவிப்பு

(புதுடில்லி)

**இலங்கையின் இனப்பிரச்சினையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடுநிலையாளராக இருந்து செயற்பட்டு வரும் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றுள்ளார். அங்கு வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இப் பேச்சுவார்த்தையின் போது இந்திய வெளிநாட்டமைச்சின் செயலாளர் திருமதி கோகுலாவும் கலந்து கொண்டார்-**

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை எத் திகதியில் எங்கே தொடங்குவது என்பதில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சோல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவை கொழும்பில் சந்தித்துப்பலசுற்றுப் பேச்சுவார்த்தைநடத்திவிட்டு லண்டனிலிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களை பரிமாற்றியதை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயித்தலில் உடன்பாடு ஏற்பட்டுள்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 10 தமிழ் கட்சிகளுக்கு பிரி.தூதுவர் அழைப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும், விடுதலைப் புலிகளின் தடைதொடர்பாகவும் பேச்சுக்கள் நடாத்துவதற்கு கொழும்பில் உள்ள பிரிட்டிஸ் தூதுவர் லிண்டா டபீல்ட்பத்து தமிழ்க்கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இச்சந்திப்பு இம்மாதம்20ம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப் புலிகளால் 4 விவசாயிகள் விடுதலை

[வவுனியா]

தமிழீழ விடுதலைப் புலிகளால் நான்கு சிங்கள விவசாயிகள் நேற்று முன்தினம் மல்லாவியில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

'ஓயாத அலைகள் மூன்று' நடவடிக்கைமூலம் புலிகளால் மீட்கப்பட்ட மணலாற்றுப் பகுதியிலுள்ள, தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற போது மேற்படி விவசாயிகள் விடுதலைப்புலிகளால் 1999ம் ஆண்டு கைது செய்திருந்தனர்

கைதுசெய்யப்பட்ட பீ.ஜெயரட்ண[வயது 31] என் ரீ ஸ்ரீவர்த்தன(வயது 43) கே. எச்,என் சுதர்த்தன[வயது26] எம் ரி.மாறசிங்க (வயது 46)

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 21 அமைப்புக்கள் மீதான தடை அடுத்த வாரம் பிரபுக்கள் சபையில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட 21 அமைப்புகளை தடைசெய்வது தொடர்பான பிரேரணையை பிரித்தானிய பாராளுமன்றத்தின் கீழ்சபை நேற்று பெரும்பான்மைவாக்குகளினால் நிறைவேற்றியதை அடுத்து அடுத்த வாரமளவில் பிரபுக்கள் சபையிலும் இப் பிரேரணை சமர்ப்பிக்கப் படவுள்ளது.

பிரபுக்கள் சபையிலும் இப் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் தமிழீழவிடுதலைப் புலிகள் உட்பட 21 அமைப்புக்களும் தடைசெய்யப்படும்:

இத் தடையை எதிர்த்து

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கல்விமுன்னேற்றத்திற்கு ஈ.பி.டி.பி. உதவுகிறது

(யாழ்ப்பாணம்)

இன்று மக்கள் அமைதி சமாதானத்தையே விரும்புகின்றனர். அதனை நிலை நாட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முழு அளவில் பாடுபடுகிறது. கல்வித்துறையின் முன்னேற்றத்திற்காகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரும் பாடுபட்டு வருகின்றார்.

மலேசிய பத்திரிகையாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்,

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மலேசிய பத்திரிகையாளர் குழு யாழ் மத்திய கல்லூரி, யாழ் அரச

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 25நாள் சத்தியாக்கிரகம் 600 மில்லியன் ரூபா நட்டம்

(அட்டன்)

மலையகத்தில் கடந்த 25 தினங்களாக இடம் பெற்ற சத்தியாக்கிரகப் போரட்டத்தினால் சுமார் 600 மில்லியன் ரூபா தங்களுக்கு நட்டமேற்பட்டுள்ளதாக தோட்டமுதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது:

400 ரூபா சம்பள உயர்வு கோரி மலையகத்தில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தசத்தியாக்கிரகப் போரட்டத்திற் அனைத்துக் கட்சிகளும் ஆதரவுஅளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த ஆயுதக்கொள்வனவில் ஊழல்

### ஊழல் ஒழிப்பு பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதக்கொள்வனவு ஊழல் எரிபொருள் மின்சக்தி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தே பெரும் இலாபமீட்டியுள்ளாரென ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுப் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

குறைந்த விலையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, அவை கூடிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டதாக போலி ஆவணங்களைத் தயாரித்து, மேற்படி ஆயுத கொள்வனவு ஊழலில் ரத்வத்தே ஈடுபட்டாரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எனினும் இவ் ஆயுதக் கொள்வனவு ஊழலில் ஜனாதிபதியின் செயலாளர் பாலபெத்தபெண்டி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்தடீசில்வா ஆகியோருக்கு எதுவித தொடர்புமில்லை யென அவ் ஆணைக்குழுப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் மிக்குண்டு வீச்சு ஒருவர் காயம்; மக்கள் பீதி

[வவுனியா]

முல்லைத்தீவில் மக்கள் குடியிருப்புகள் மீது மிக் விமானங்கள் அடுத்தடுத்து பல குண்டுகளை வீசியதில் யோகராசா உதயகுமார் [வயது22] என்பவர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிக் விமானங்களின் கண்மூடித்தனமான குண்டு வீச்சினால் மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்திருந்த போதும் விமானப் படையினரின் இக் குண்டு வீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பது மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. (ம)

## முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி இரண்டாம் வருட மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விறகு வியாபாரிகள் துன்பம்

[மண்டைதீவு]

அல்லைப்பிட்டி சோதனைச் சாவடி விஸ்தரிக்கப்பட்டுள்ள காரணத்தினால் துவிச்சக்கர வண்டிகளில் விறகு எடுத்துச் சென்று விற்பனை புரிவோர் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். (உ-11)

## நால்வர் விடுதலை

(மந்திகை)

கடந்த 6ம் திகதி கொடிகாமம், தாவளை, இயற்றாலைப் பகுதியில் கைது செய்யப்பட்ட நால்வரும் கடந்த சனிக்கிழமை (10/3) தம்பசிட்டியில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் முன்னிலையில் காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கிராம சேவகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடைக்குச் சென்றசமயம் கைது செய்யப்பட்ட தங்கராசா மகேஸ்வரன் [வயது 21] தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் கூட்டிச் செல்லப்பட்ட சந்தசாமி ஸ்ரீகாந்தன் [வயது 24], நவரத்தினராசா ஜெயராசா, [வயது 24] குடமியனை சேர்ந்த சிவயோகராசா சுரேஸ் ஆகிய நால்வருமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (உ-23)

### சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

# கிராம அலுவலர்களின் தீராத முயற்சியால் சைடர் பாவனை ஒழிப்பு

(ஊர்காவற்றுறை)

மதுபானத்திற்குப் பதிலாக, புங்குடுதீவில் பாவனையில் இருந்த சைடர் மதுபாவனை முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதி கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எடுத்த தீராத முயற்சியின் பேரில் இவ் உயிர்கொல்லி மதுப்பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

இதே வேளை, புங்குடுதீவுக்கு மதுபானம் எடுத்துச் செல்வதற்கு கடற்படையினர் தடை விதித்ததையடுத்து, மதுப்பிரியர்கள் வீடுகளில் வைத்து வேப்பமரப்பட்டை, வேறு மரப்பட்டைகள் ஆகியவற்றுடன் வேறு சில ஒன்றுக்கும் உதவாத பொருட்களைப் பாவித்து சைடர் எனும் இப் புதிய மதுவகையை உற்பத்தி செய்ததும்.

அப்பகுதியில் மேற்படி மதுபானத்திற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டதும் தெரிந்ததே.

கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் இப் பயன்மிகு முயற்சிக்கு பலரும் பாராட்டு தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-75)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 14ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது:

### சங்கானை

| | |
|---|---|
| 178659 ஏ | 179240 ஏ |
| 179240 பி | 179240 சி |
| 179240 டி | 179240 ஈ |
| 182785 ஏ | 183039 ஏ |
| 183039 பி | 183054 ஏ |
| 183222 ஏ | 183222 பி |
| 183252 சி | 183422 ஏ |
| 183422 பி | 183422 சி |
| 183425 டி | 185083 ஏ |
| 185150 ஏ | 185154 ஏ |
| 185155 ஏ | 185186 ஏ |
| 185271 ஏ | 185273 ஏ |
| 185273 பி | 185322 ஏ |
| 185322 பி | 185322 சி |
| 185965 பி | 186903 ஏ |
| 186904 ஏ | 186979 ஏ |
| 187006 ஏ | 187024 ஏ |
| 187034 ஏ | 188965 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 171472 ஏ | 180005 ஏ |
| 180005 பி | 180005 சி |
| 180309 ஏ | 181749 ஏ |
| 182153 ஏ | 184331 ஏ |
| 184331 பி | 184331 சி |
| 184353 ஏ | 184353 பி |
| 184453 ஏ | 184453 பி |
| 184454 ஏ | 184506 ஏ |
| 184562 ஏ | 184576 ஏ |
| 184774 ஏ | 184774 பி |
| 184807 ஏ | 184807 பி |
| 184807 சி | 184807 டி |
| 184807 ஈ | 184830 ஏ |
| 185882 ஏ | 184830 பி |
| 185899 ஏ | 185882 பி |
| 185919 ஏ | 185910 ஏ |
| 185992 பி | 185992 ஏ |
| 185995 பி | 185995 ஏ |
| 186042 ஏ | 186003 ஏ |
| 186156 ஏ | 186065 ஏ |
| 186254 பி | 186254 ஏ |

### கரவெட்டி

| |
|---|
| 156886 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 182996 ஏ | 183008 ஏ |
| 183017 ஏ | 184048 ஏ |
| 184048 பி | 184168 ஏ |
| 184168 பி | 184168 சி |
| 184168 டி | 184168 ஈ |
| 184183 ஏ | 184187 ஏ |
| 184207 ஏ | 184207 பி |
| 184207 சி | 185116 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 171021 ஏ | 171022 ஏ |
| 171032 ஏ | 171131 ஏ |
| 171440 ஏ | 171454 ஏ |
| 171477 ஏ | 179722 ஏ |
| 179734 ஏ | 179734 பி |
| 179787 ஏ | 179787 பி |
| 179787 சி | 184197 ஏ |
| 184224 ஏ | 180742 ஏ |
| 184777 ஏ | 184823 ஏ |
| 185880 ஏ | 185881 ஏ |
| 185920 ஏ | 185965 ஏ |
| 185965 பி | 186075 ஏ |
| 186185 ஏ | 184932 ஏ |
| 184932 பி | 184984 ஏ |
| 185190 ஏ | 185190 பி |
| 185216 ஏ | 185216 பி |
| 185216 சி | 185216 டி |
| 185260 ஏ | 185260 பி |
| 185314 ஏ | 186924 ஏ |
| 186941 ஏ | 187072 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179361 ஏ | 179361 பி |
| 181591 ஏ | 183329 ஏ |
| 183357 ஏ | 183457 ஏ |
| 185408 ஏ | 185202 ஏ |
| 185227 ஏ | 185227 பி |
| 185246 ஏ | 185261 ஏ |
| 185265 ஏ | 185286 ஏ |
| 195307 ஏ | 186927 ஏ |
| 186927 பி | 186927 சி |
| 186953 ஏ | 187007 ஏ |
| 187066 ஏ | 187067 ஏ |
| 187138 ஏ | 183457 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 185026 ஏ | 184032 ஏ |
| 184032 பி | 184032 சி |
| 184083 ஏ | 184100 ஏ |
| 184100 பி | 184100 சி |
| 186149 ஏ | 184174 ஏ |
| 184543 ஏ | 178577 ஏ |
| 178577 பி | 178577 சி |
| 183186 ஏ | 183186 பி |
| 184975 ஏ | 185062 ஏ |
| 185062 பி | 185290 ஏ |
| 186915 ஏ | 186915 பி |
| 187071 ஏ | 187071 பி |

## அழைப்புக் கட்டளை

### இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/மாவட்ட நீதிமன்றத்தில்

நவசீலன் பெண் தாட்சாயினி,
நீர்வேலி;

வழ: இல. மணநீக்கம்/169;

எதிர் வழக்காளி

சிவமுத்துலிங்கம் நவசீலன்,
கொத்தனவு, இடைக்காடு,
அச்சுவேலி;

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளி மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி தனக்கும், எதிராளிக்கும் 1994ம் ஆண்டு ஆவணி மாதம் 19ந் திகதி நடைபெற்ற விவாகப் பதிவை, எதிராளி, வழக்காளியை வேண்டுமென்று வன்மையாகத் துறந்தார் என்ற காரணத்துக்காக ரத்துச் செய்து ஒரு மணநீக்கத் தீர்வையை இம் மன்று இட வேண்டும் என எதிராளிக்கு எதிராக இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டுவிளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்;

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையானஎல்லா அறிவித்தல்களும்சேர்ப்பிக்கப் படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

**எர்மால் வரையப்பட்டது, நீதிமன்றக் கட்டளைப்படி**
**கனகரத்தினம்அசோசியேட்ஸ் து.சிறிமோகன்(ஒப்பம்)**
**வழக்காளியின் பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்**
**சட்டத்தரணிகள் யாழ்ப்பாணம்.**

**குறிப்பு:** விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்கநீதிமன்றத்தில்இவ்வழக்குஏற்படும் தேதிபற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80-ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து. சிறிமோகன்-(ஒப்பம்)**
**கையொப்பம், பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்-**
**யாழ்ப்பாணம்.**

(2001-03-13) [கி-1608]

### உளவியல்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் தோன்றுவதோடு பல பாத்திரங்களைக் கொண்டு ''காத்திருப்பு'' தொடர்கிறது இன்று உலகளாவிய ரீதியிலே பாலியல், உளவியல் இன்றும் வேரோடிக் கிடக்கும் மிகவும் முக்கியமான பிரச்சினை. இதில் உளவியலா? பாலியலா? இல்லை, இவை இரண்டையும் உடைத்தெறிந்து நிற்கின்ற ஓர் புனிதமான உறவு காதலாக இங்கு மேலோங்கி நிற்கிறது. என்பதற்கு இக் 'காத்திருப்பு' ஒரு சிறப்பு மிகுந்த நாவல் எனலாம்.

**உளவியல்**

ஒரு சமூகத்தால் ஒரு மனிதன் எவ்வாறு முன்னேற்றப் பாதைக்குச் செல்கின்றான் அதே சமூகத்தால் பின் வாங்கப்படுகின்றான். இச் சமூகத்தால் உளவியலின் ஆதிக்கம் மேலோங்குவதையும் ஒரு சமூகம் மனித வாழ்க்கையில் முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதனையும் சுப்பிரமணியத்தின் பாத்திரம் மூலம் வெளிக்கொணர்கின்றார் எழுத்தாளர். சுப்பிரமணியத்தால் ஈசாவை பொருளாதாரத்தினாலும், ஏனைய புறக்காரணிகளாலும் திருப்திப்படுத்த முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஈசாவிடம் பாலியல் தனது ஆதிக்கத்தினைச் செலுத்தி விடுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தினை மிகச் சிறப்பாக குசினிக் கைவிளக்கு மூலம் வெளிப்படுத்துகின்றார். இறுதியில் கணவன் ஈசாமீது வைத்திருந்த காதல் அவன் சுகமில்லாத சந்தர்ப்பத்திலேயே ஈசாவால் அறிய முடிகின்றது. அவன் காதலின் தன்மையினையும், அதன் உண்மைத்தன்மையையும் அறிந்து தனக்கும் நந்த கோபாலனுக்கும் இடையில் இருந்த தொடர்பினை துண்டிப்பதோடு, அவள் இறந்த சுப்புவிற்காகவே இனி தன் வாழ்க்கை என்று தெளிவான ஒரு முடிவினை எடுக்கின்றாள். இந்த முடிவின் வாயிலாக எழுத்தாளர் சமூகத்திலிருக்கும் பாலியல் சம்பந்தமான பிரச்சினையில் இருந்து விழிப்படையச் செய்கின்றார்.

மேலும் இந்த நாவல் வாயிலாக தெணியானின் எழுத்தில் தனித்துவமாக சாதி, மதம் போன்ற பிரச்சினைகள்தான் என்று எதிர்பார்த்த வாசகர்களாகிய எமக்கு ஓர் ஏமாற்றத்தினை கொடுத்தது மட்டுமல்லாமல் தன்னால் காதல், பாலியல், உளவியல் மற்றும் சமூக வாழ்க்கை முறைமைகள் போன்றவற்றையும் எழுத முடியும் என்பதனை இந்த ஒரு நாவல் வாயிலாக காட்டியுள்ளார். மேலும் இவரின் நாவல்கள் வாசிக்க இந்த காத்திருப்பு எமை காத்திருக்க வைத்துவிட்டது.

## இராசி பலன்

17.3.2001
(பங்குனி 4, சனி)
அட்டமி மாலை 7.06 வரை
மூலம் பி.இ 3.05 வரை
ராகுகாலம் 9.20 - 10.50
சுபநேரம் 3.26 - 4.50
சித்தம்

**மேடம்**
பிரயாணம், திட்டமிடல், உடல் உபாதை, அச்ச நிலை.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாணபயம், காரிய தாமதம், வியாதி;

**மிதுனம்**
போசனசுகம், பிரயாணம், கௌரவம், தனவரவு.

**கடகம்**
நோய் குணமடைதல், பகைவர் விலகுவர், புதிய முயற்சி, திடீர்ப் பயணம்.

**சிங்கம்**
வியாபார மேன்மை, காரிய தாமதம், கௌரவக் குறை, வியாதி;

**கன்னி**
தன்னம்பிக்கைக் குறைவு, அமைதிக் குறைவு, காரிய தாமதம், திடீர் நன்மை.

**துலாம்**
காரியம் கைகூடும், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, தனவரவு.

**விருச்சிகம்**
தனவிரயம், விதண்டாவாதம், மதிப்புக் குறைவு, காரியம் கைகூடும்.

**தனுசு**
ஆழ்ந்த சிந்தை, பெரியோர் ஆசி, ஜனவசியம், சயன சுகம்.

**மகரம்**
சயன சுகக்குறைவு, உணர்ச்சிவசப்படல், பொருள் விரயம், பிரயாணம்;

**கும்பம்**
கீர்த்தி, பொருள்வரவு காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி;

**மீனம்**
சுப நிகழ்ச்சி, தொழில் சிறப்பு, முயற்சிகைகூடும், அதிகாரம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## செய்முறை வகுப்பு

இயந்திரவியல் டிப்ளோமா, சட்டமாணி கற்கை நெறி செய்முறை வகுப்புக்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு வசதியாக மேற்படி கற்கை நெறிகளுக்கு யா/திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்த மாணவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பதிவுப் புத்தகங்களுடன் சமுகம் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தினத்தன்று அவர்களுக்கான புத்தகங்களும் வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## ஒன்றுகூடல்

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடலும், மதிய போசன விருந்தும் கல்லூரி நடராஜ மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. (உ-109)

## நாளொன்றுக்கு 9 ரூபா சம்பள அதிகரிப்புக்கு இணக்கம்

# போராட்டம் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளருக்கு 400 ரூபா சம்பள உயர்வு கோரிக் கடந்த 26 நாட்களாக இடம்பெற்று வந்த சத்தியாக்கிரகப் போராட்டம், தொழில் அமைச்சர் அலவி மௌலானா எடுத்த நடவடிக்கையை அடுத்து நேற்று முன்தினம் முதல் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் ஹட்டனில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்து 25 நாட்களின் பின் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் தலையிட்டதின் பேரில் தோட்ட முதலாளிமார் சங்கமும் தொழிற்சங்க அமைப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வந்ததை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

தோட்டத் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு 9 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாகத் தோட்ட முதலாளிமார் சங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதாகவும், இப்போராட்டம் ஆறுமுகம் தொண்டமானுக்குக் கிடைத்த வெற்றியென்றும் மலையகத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் போக்குவரத்து அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மற்றும் அமைச்சர்களான எஸ்.பி. திஸநாயக்கா, மங்கள சமரவீரா, சேனல் அனுருத்த ரத்வத்த ஆகியோரும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் முதலாளிமார் சம்மேளனத்துடனும் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர். (வ)

## மரண தண்டனையை நிறுத்தவும் ஐரோ. யூனியன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மரணதண்டனைகள் நிறைவேற்றுவதை நிறுத்துமாறு ஐரோப்பிய யூனியன் இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

மரணதண்டனை வழங்குவதற்குப் பதிலாக ஆயுட்கால சிறைத்தண்டனையை வழங்குமாறு அவ் அமைப்பு மேலும் சுட்டியுள்ளது.

பதினாறு வருடங்களுக்கு முன்னரே மரணதண்டனை விதிப்பதை ஐரோப்பிய யூனியன் தடை செய்து, அதற்குப் பதிலாக ஆயுட்கால சிறைத்தண்டனையை வழங்குகின்றது.

மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் நாடு என்றவகையில் இலங்கையும் மரணதண்டனை வழங்குவதை நிறுத்தி, ஐரோப்பிய யூனியன் நாடுகளைப் பின்பற்றி குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவ்வேண்டுகோளில் வலியுறுத்தியுள்ளது. [செ]

## விடுதலைப்புலிகளுக்கு நிதிசேகரிப்போர்மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரிப்பதைத்தடுக்க சிங்கப்பூர் அரசாங்கம் கடும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

நீண்டகாலமாக விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்து வந்த முக்கியநபர் ஒருவர் சிங்கப்பூர் உள்ளூர்ப் பாதுகாப்பு பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே சிங்கப்பூர் அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சிங்கப்பூர் உள்ளூர் பாதுகாப்பு பிரிவினர் நடத்திய தீவிர விசாரணையின்போது விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் பதின்மூன்று பேர் ஈடுபட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு நிதிசேகரிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுத்தமை, எந்த ஒரு வெளிநாட்டினதும் வேண்டுகோள் அல்ல என சிங்கப்பூரின் உள்ளூர்ப்பாதுகாப்புப்பிரிவு சுயமாக மேற்கொண்ட நடவடிக்கையே எனவும் சிங்கப்பூரின் உள்த்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ)

## பஸ் பள்ளத்தில் பாய்ந்தது ஏழுபேர் ஸ்தலத்தில் பலி

(கொழும்பு)

சிவனொளி பாதமலைக்கு சென்ற யாத்திரிகர் பஸ் ஒன்று இருநூறு அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் ஏழுபேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

பஸ் நடத்துநரும் பயணம் செய்த ஆறு பெண்களும் ஸ்தலத்தில் பலியாகினர்.

இருபத்தாறு பயணிகள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை குருவித்த தெமங் சந்தியிலேயே இவ்விபத்து இடம்பெற்றது. (செ)

## கரையோரப் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச்சத்தம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கரையோரப்பகுதிகளை அண்டி சில நாட்கள் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமுள்ளன.

குருநகர், பாஷையூர் ஆகிய கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே இவ் வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன.

இது இராணுவத்தினர் பயிற்சியில் ஈடுபடும் போது தீர்க்கப்படும் வேட்டுகளென அப்பகுதியில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர். (உ 59)

## மாதர் முன்னேற்றச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைகரம்பொன் வடக்கு மாதர் கிராம முன்னேற்றச்சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவியாக திருமதி ஜீவா அலோசியஸ் றமணி, உப தலைவியாக திருமதி யேசுதாசன் றமணி, செயலாளராக திருமதி பெர்னாண்டோ வதனா, உப செயலாளராக செல்வி ந.விஜிதா பொருளாளராக திருமதி இ.யசிந்தா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வெகு விரைவில் இம் மாதர் சங்கத்தின் ஊடாக தையல் பயிற்சி, சயிறு திரித்தல், ஆகியபயிற்சிகள் யுவதிகளுக்கு வழங்கப்படவுள்ளன. (உ-75)

## 110 மிதிவெடிகள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை மற்றும் மட்டுவில்ப் பகுதிகளில் இராணுவப் பொறியியலாளர்கள மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது 110 மிதிவெடிகள் மீட்கப்பட்டு செயலிழக்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. [ந-4]

## முத்திரையிடல்

(மண்டைதீவு)

கடந்த 10 வருடங்களின் பின்னர், தீவுப்பகுதி தெற்கு பிரதேச சபையினரால் அப்பகுதி வர்த்தக நிலையங்களின் தராசுகள், படிகளுக்கு முத்திரையிடும் பணி இவ்வாரம் முதல் இடம்பெற்று வருகிறது. (உ-11)

## பௌத்த துறவி வசமிருந்து கசிப்பு போத்தல் மீட்பு

(கொழும்பு)

தெரணியகலை, பொலவத்த பகுதியில் உள்ள பௌத்த பிக்கு ஒருவரை பொலிஸார் சோதனைக்குட்படுத்திய போது அவரது இடுப்பில் கசிப்புப் போத்தல் ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி பௌத்த துறவிக்கு எதிராக ருவான்வெல்ல நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹிங்கலாகந்த பௌத்த விகாரையைச் சேர்ந்த பிக்குவான இவர் தினமும் கசிப்பு அருந்தி வருகிறார் என மக்கள் பொலிஸாரிற்கு கொடுத்த தகவலையடுத்தே இவர் சோதனைக்குட்படுத்தப்பட்டார். (உ-9)

## கரம்பொன் சண்முகநாதன் மகா வித்தியாலயத்திற்கு மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா யா/கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்திற்கு மின் பிறப்பாக்கி ஒன்றினை வழங்கியுள்ளார்.

அண்மையில் பாடசாலையில் இடம் பெற்ற இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட என்.மதனராஜா அதிபரிடம் மின்பிறப்பாக்கியினைக் கையளித்தார்.

பாடசாலையில் மாணவர்களின்தேவைக்கேற்பமின்சாரம் வழங்குவதற்கு ஏற்றவகையில் கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து மின்பிறப்பாக்கிகொள்வனவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## ஆலயத்திற்கு தொலைபேசி

[யாழ்ப்பாணம்]

மருதனார்மடம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயரின் ஆலயத்திற்கு அணமையில் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (உ-124)

## வைத்தியசாலைக்குள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்பபாணம்)

யாழ்/ போதனா வைத்தியசாலை நோயாளர் பராமரிப்புச் சேவையில் ஈடுபட்டு வரும் பெண் ஒருவரின் பணப்பை கடந்த 12 ஆம் திகதி நோயாளர் விடுதிப்பகுதியில் [விடுதி இல. 02] திருடப்பட்டுள்ளது.

நோயாளர் பராமரிப்பு சேவையில் ஈடுபட்டு வரும செல்வராசா தெய்வலோகம் என்பவரின் பல்லாயிரம் ரூபா அடங்கிய பணப்பை அடையாள அட்டைகளுடன் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 12 ஆம திகதி யா/ போதனா வைத்தியசாலைக் கிளினிக் பகுதியில் பெண் ஒருவரால் வேறோர் பெண்ணின பணப்பை அடையாள அட்டைகளுடன் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் மேலும் 13 பேருக்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் மேலும் 13 பேருக்கு பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்ட 13 பேரின் பெயர், விபரங்கள் வருமாறு.

கந்தசாமி முரளிதரன் மாலுசந்தி. ரேவதி தம்புக்குட்டி, துவாரகை வீதி, கோண்டாவில், இராசரத்தினம் குமரன், ஊரெழு மேற்கு, சந்திரசேகரம் சகுந்தலாதேவி துன்னாலை மேற்கு நடேசு, செல்வச்சந்திரன் சாவற்கட்டுஆனைக்கோட்டை வட ஜனார்த்தன குமாரி வரதராஜப்பெருமாள், சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை கதிரவேல் சத்தியமாலினி, உரும்பிராய் வடக்கு.

சிவக்கொழுந்து, சிவராஜா இமையாணன், உடுப்பிட்டி ஐங்கரன், ரவிச்சந்திரன் அல்வாய் வடக்கு மாணிக்கராசா, தயாளினி கோப்பாய் தெற்கு இவர்கள் 10 பேருக்கும் உரிய நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுப்பிரமணியம், மணிவனி கொடிகாமம் கிருஷ்ணசாமி செல்வராசா, சாவகச்சேரி கணபதிப்பிள்ளை மல்லிகா தேவி.

இவர்கள் மூவரும் தமக்குரிய நியமனக் கடிதங்களை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். [உ-10]

## உழவு இயந்திரங்கள் கொள்வனவு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவை, விவசாய மற்றும் புனரமைப்பு திட்டங்களை விரைவு படுத்துவதற்கென அப்பகுதிக்கு இரு உழவு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (உ-75)

## மகளிர் பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- பகவான் ஸ்ரீ சத்திய சாயி- சேவாநிலையத்தில் எதிர்வரும் 19 ம்திகதி திங்கட்கிழமை பி.ப. 3.30க்கு விசேட மகளிர் பஜனை நடைபெறவுள்ளதாக நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-104)

## இன்று படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில், சீனத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட படங்களின் வரிசையில் இரண்டாவதாக சாங் சோங் இயக்கிய ''த கப்பி பச்சிலரஸ்'' எனும் திரைப்படம் இன்று (சனிக்கிழமை) மு.ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் பங்கு பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## நஞ்சருந்திய குடும்பஸ்தர் மரணம்

நஞ்சருந்திய நிலையில் கடந்த 10 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த் குடும்பஸ்தர் நேற்று அங்கு மரணமானார்.

5 பிள்ளைகளின் தந்தை இவரென குறிப்பிடத்தக்கது [உ-10]

# செய்தித் துளிகள்

## நிரந்தர நியமனம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபையில் கடந்த காலமாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஒன்பது சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக நகர பிதா நா. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாகச் சாரதிகள், நகர சுத்திகரிப்பாளர்கள், சுகாதாரத்தொழிலாளர்கள், வீதித் தொழிலாளர்களாக கடமை புரிந்த ஒன்பது பேருக்கே இம் மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளது. (உ-23)

## பதில் பிரதேச செயலர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

உடுவில் மற்றும் நல்லூர் பிரதேச செயலராக கடமையாற்றிய ஆறுமுகம் மகாலிங்கத்தின் மறைவை அடுத்து அவரின் வெற்றிடத்திற்கு கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் உடுவில் பிரதேச செயலர்பிரிவிற்கும் சண்டில்லிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்கும் பதில் பிரதேச செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். [உ-15]

## இசைக்கல்லூரி பல்கலையுடன் இணையும்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு விபுலானந்தர் இசைக் கல்லூரியை பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து விரைவில் இவ்விணைப்பு இடம்பெறுமெனத் துணை வேந்தர் எம். எஸ் மூக்கையா தெரிவித்தார். (வ)

## சுவரொட்டிப் போட்டி

(இணுவில்)

பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு குழுவினரால் வலிகாமம் கல்விவலயப் பாடசாலை மாணவர்களிடையே சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்கு கொள்வோரது ஆக்கங்களை இம்மாதம் 20 ஆம் திகதி பகல் 12.00மணிக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட வலயக் கல்வி பணிமனையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப் பட்டுளளது. (உ-49)

## இளைஞர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யா/சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்டிருந்த, 6 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பீற்றர் பிறைனர்என்ற இளைஞர் சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் நேற்று முன் தினம் யா/நீதி மன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (உ-6)

## சிறுவர் சிகிச்சை நிலையம்

(இணுவில்)

ஈவினை கிராமத்தில், பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் முன்பள்ளிசிறார்கள், வறுமை காரணமாக பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் நன்மை கருதி சிறுவர் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (உ-49)

## மாதாந்த உதவிப் பணம்

(மந்திகை)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பொது சன உதவிக் கொடுப்பனவுகளை பெறுவோருக்கான மார்ச் மாதக் கொடுப்பனவுகள் 11ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

கசநோய், புற்றுநோய், பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில, கச்சாய், மந்துவில், வரணி, விடத்தற்பளை ஆகிய தபாலகங்களில் எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ- 23)

## பணம் திருப்பி அனுப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் உயர்தொழில் நுட்பக் கல்லூரியின் 16 ஆயிரம் மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுக்கென இம் மாதம் அனுப்பி வைக்கப்பட்டஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவில் 48ஆயிரம் ரூபா பணம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

உரியவர்கள் பணத்தினைப் பெறத் தவறியதனாலேயே திருப்பியனுப்பும் நிலை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## மகாசிவம் வன்னி பயணம்

(வவுனியா)

வன்னியில்எதிர் வரும்திங்கட்கிழமை 19 ஆம் திகதி நடைபெறவுள்ள அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க எழுச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்குச் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி செல்லவுள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் வன்னி செல்லவுள்ள த. மகாசிவம் வடக்கு-கிழக்குமாகாணசபை ஆளுனரின் அனுமதி பெற்றே அங்கு செல்கிறார் என்று ஆசிரிய சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## திட்டமிட்டபடி பரீட்சை இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவன இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள்.

இம் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் அத்தினத்தில் நடைபெறமாட்டாதெனவும்,

இப்பரீட்சை நடைபெறுவதற்கு 14 தினங்கள் முன்னதாக புதிய திகதி அறிவிக்கப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ-6)

## காய்ச்சலால் மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக கடந்த சில நாட்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் கடந்த 12 ஆம் திகதி அங்கு மரணமானார்

சுதுமலையைச் சேர்ந்த யாழ். போதனா வைத்திய சாலைசென்-ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புசேவைகாரியாலயஉத்தியோகத்தர் இ. மகாதேவன் [வயது54] என்பவரே மரணமானவராவர் (உ-104)

# க.பொ.த. உயர்தர மாணவர்க்கான உயிரியல்பாட வினாக்கள் - 06

## ஆசிரியர்: கே. சுகந்தன் B.Sc

**வினா 1**

1) அ) Phylum:- Chordata இனைச் சிறப்பிக்கும் மூன்று இயல்புகளைத் தருக?
1)————————
2)————————
3)————————

ஆ) நீர் வாழ்க்கையுடன் தொடர்புடைய Class:- Pisces இன் இரு இயல்புகளைத் தருக?
————————
————————

இ) தரை வாழ்க்கையுடன் தொடர்புடைய Class:- Amphibia இன் இரு இயல்புகளைத் தருக?
————————

ஈ) நீர் வாழ்க்கையில் இருந்து கரைவாழ்க்கைக்கு ஏற்பட்ட கடப்புடன் நேர்த்தொடர்பு கொண்ட Class:- Amphibia இன் ஒரு முழு உடலியின் இயல்பு தருக?
————————

உ) Class:- Reptila Class:- Aves ஆகிய வற்றிடையே உள்ள இரு பிரதான வேற்றுமைகளைத் தருக?
————————
————————

ஊ) மேலே உ) ல் குறிப்பிட்ட இரு Classes இனதும் ஒற்றுமை ஒன்று தருக?
————————

எ) Class:- Mammalia இனைச் சிறப்பிக்கும் இரு இயல்புகளைத் தருக?
————————
————————

**வினா 2**

A - Barnacle B - Crab C - Nereis
D - starfish E - Seaanemone

கீழே உள்ள வினாக்கள் மேலே தரப்பட்டுள்ள அங்கிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

A 1) மேலுள்ள அங்கிகளின் பொதுவான வாழிடம் யாது?
2) இப் பொதுவான வாழிடத்தில் மேற்குறிப்பிட்ட விலங்குகள் வாழும் குறிப்பான இடங்களைத் தருக?
3) மேலுள்ள விலங்குகளில் எது ஆதாரப்படையில் நிரந்தரமாக நாட்டப்பட்டுள்ளது?
4) மேலுள்ள வற்றில் இரை கௌவிகள் எவை?
————————

B) 1) மேலுள்ள விலங்குகள் ஒவ்வொன்றையும் இனங்காணப் பயன் படுத்தப்படும் ஓர்
————————
இயல்பைத் தருக?

C) 1) Crab இடம்பெயர எக்கட்டமைப்பைப் பயன் படுத்தும்?
2) Nereis இடம்பெயர எக்கட்டமைப்பைப் பயன்படுத்தும்?
————————
3) மேலுள்ள விலங்குகளில் எது அழன் மொட்டு சிறைப்பையைக் கொண்டுள்ளது?
————————

D) Nereis அடங்கும் கணம் எது?
————————
2) நண்டு எக்கணத்தைச் சேர்ந்தது?
————————

**வினா இலக்கம்-03**

**விடைகள் வினா-1**

A) i) 5 ii) இறா iii இருபக்கச்சமச்சீர் ஆரைச்சமச்சீர் அற்றது.
iv) தனிவால்வுடைய ஓடு/பாதம், தலை, பூக்கள்உண்டு V) இரண்டுவால்புடைய ஓடு

B) i) ஒரு அங்கியின் உடலானது சமவயதுடைய தொடர்ச்சியான துண்டமைப்பைஉடையதும் ஒவ்வொரு துண்டத்திலும் வெவ்வேறு தொகுதிகளினதும் பகுதிகள் காணப்படல்
ii) எத்தளத்தினூடாகவும் இருசம பகுதிகளாகப் பிரிக்கக்கூடியவை.
iii) மண்புழுக்களில் இனப் பெருக்கத்தின் போது புழுக்கூட்டை உண்டாக்கக் கூடிய உடலின் வெளிப்புறமாகக் காணப்படும் விசேட கட்டமைப்பு:
iv) அனலிடாவின் மேற்தோலால் சுரக்கப்படும் முள் போன்ற சட்டமைப்பு.
v) Class-Cestode விலங்குகளின் உடலின் முற்புறத்தில் காணப்படும் பற்றிப் பிடிப்பதற்குரிய கட்டமைப்பு.

C i) உறிஞ்சி / கொழுக்கிகள் /சிறுசஞ்சு
ii) உறிஞ்சல்/பற்றிப்பிடித்தல்/இடப்பெயர்ச்சி
iii) குழாய்ப்பாதம்
iv) மண்புழு/அட்டை/நட்சத்திர மீன்
v) நாடாபபுழு/நெமற்றோடு

| | கணம் | வகுப்பு |
|---|---|---|
| D) i) | பிளற்திகெல்மின்திஸ் | செஸ்ரோடா |
| ii) | அனலிடா | ஒலிகோகீற்றா |
| iii) | எக்கைனோடேமேற்றா | அஸ்ரறொய்டியா |
| iv) | மொலஸ்கா | இலமெல்லிபிரங்கியேற்றா |
| v) | ஆத்திரோபோடா | கிறஸ்ரேசியா |

**வினா 02**

A) i) Aristotle
ii) a) கணவரலாற்று, உர்ப்புத்தொடர்புகளை அறியலாம்.
ii) b) அங்களுக்கிடையிலான தொடர்புகளை அறியலாம்:
iii) அங்கிகளை அவற்றின் உருவவியல், முளையவியல், உயிரிரசாயனவியல், மூலக்கூற்றுஉயிரியல் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு கூர்ப்புத்தொடர்புகளையும் கணவரலாற்றுத் தொடர்புகளையும் தெளிவுபடுத்தும் பாகுபாடு
iv) விஞ்ஞானிகளுக்கு இடையே உடன்பாடு இல்லாமல் இருத்தல்
ஓர் விலங்கு கொண்டிருக்கும் இயல்புகள் வேறு விலங்குக் கூட்டங்களுக்கும் பொதுவானதாகக் காணப்படலாம்.
v) அங்கிகளின் பெயர்கள் சாதிப்பெயரையும் இனப்பெயரையும் கொண்டிருக்கும் அங்கிகளின் பெயர்கள் அவற்றிற்குத் தனித்துவமானது:
இலத்தின் மொழியில் எழுதப்படும்.

B) 1) இடைத்தோற்படையால் முற்றாகச் சூழப்பட்ட அறை
2) உடற்குழி — இடைத்தோற்படையால் முற்றாகச் சூழப்பட்டிருக்கும்.
போலி உடற்குழி — இடைத்தோற்படையால் முழுமையாகச் சூழப்பட்டிருப்பதில்லை.
3) Nematoda
4) Coelenterata / Platyhelminthes / Annelida / Mollusca
5) நோய்களை உண்டாக்கும் ஒட்டுண்ணிகளாக இருப்பதால்

C) 1) Coelenterata — Planula / தட்டையன் குடம்பி
Annelida — trochophote — சக்கரந்தாங்கி
2) Haemoglobin, Haemoerythria, Chlorocruorine
3) நீர்ச்சூழல்
4) நகருயிர்கள்

**வினா இல - 04 விடைகள்**

**வினா 1**

1) Starfish 2) Hydra 3) 4
2 3 5
4) Prawn 5) Cuttlefish
Centipede Earthworm

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# ஞானி கலங்கமாட்டான்

நான் உண்மையைக் கண்டு விட்டவன் அல்ல. மெய்ப்பொருளை நாடும் மக்களில் நான் ஒருவன். அவ்வளவு தான். உண்மையைக் காண்பதற்கு நான் வழிகண்டேன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். மெய்ப்பொருளைக் காண்பதற்கு இடையறாமல் முயன்று வருகிறேனானாலும் நாடும் பெரும் பொருளை இன்னமும் காணவில்லை. ஒருவன் மெய்ப்பொருளை முழுதும் கண்டுவிட்டால் அவன் வீடு பெற்றவனேயாவான். வாழ்க்கையின் பலனை அடைந்து விட்டு முக்தி கண்டவன் ஆவான்.

என்னுடைய குறைகளை நான் உணராமல் இல்லை. நன்றாகவே உணர்வேன். உணர்ந்து அதற்காக வருத்தமும் படுகிறேன். ஒருவன் தன் குறைகளைக் கண்டு கொண்டு விட்டால் அதுவே ஒரு பெரும் பாக்கியம். எனக்கு ஏதேனும் விஷேச சக்தி இருப்பின், அதன் இரகசியம் என்னவென்றால் என் குறைகளை நான் நன்றாக அறிந்திருப்பதே ஆகும். மற்றவர்களுடைய குறைகளை யாருமே காண்பார்கள். தன்னுடைய குற்றங் குறைகளை ஒருவன் அறிந்து கொள்வது அரிது. அதற்கு வேண்டிய ஞானம் எளிதில்கிடைக்காது. அந்த அறிவைப் பெற்றிருப்பதே என்னுடையபாக்கியம்.

எனக்குப் பூரண அறிவு இல்லை என்பதற்கு என்னுடைய துயரமே. பாதும் சாட்சி. நான் சம்பூரண ஞானமடைந்தவனாக இருந்தால் நான் காணும் துயரம் என் உள்ளத்தைக் கலங்கச் செய்யாது. ஞானியானவன் துயரங்களைக் காண்பான். ஆனால் அவற்றைக் கண்டு கலக்கமடைய மாட்டான் துயரத்துக்கு மருந்து என்ன என்பதைச் சொல்வான். பூரண ஞானம் பெற்று நான் ஒரு சித்தனாக இருந்திருப்பேனாகில், நான் கண்ட உண்மையும், சொல்லும், மருந்தும் தாமாகவே பிறரை வசப்படுத்தியிருக்கும், நான் ஒன்றும் அதற்காகச் செய்ய வேண்டியிருக்காது. நான் சொல்லிக் காட்டும் உண்மையே அதை உணரும் சக்தியைப் பிறருக்குத் தந்திருக்கும். நான் கண்டுவிட்டதைப் பிறருக்கு எடுத்துக்காட்டி அறிவு ஊட்ட இவ்வளவு வருத்தப்படவேண்டியிராது. என் அறிவானது குறையும் குற்றமும் கலந்த அறிவு. பூரண அறிவு அல்ல. அதனாலே தான் நான் கண்டதைப் பிறருக்கு உணர்த்தும் சக்தி எனக்குப் போதிய அளவில் உண்டாகவில்லை. நான் கண்டு என் மனதில் உறுதியாகநிற்பதைப் பிறர்காணும்படி செய்வது மிகவும் சிரமம் ஆக இருக்கிறது நான் சொல்லுவது பிறருக்கு எளிதில் விளங்குவதில்லை. பல சமயம் சொல்லுவதெல்லாம் வீணாகிறது. என் முயற்சி பலன் தராமலும் போகிறது. இதற்கெல்லாம் காரணம் என்னுடைய கொள்கையிலுள்ள முறையே.

சம்பூரண ஞானியாகாததான் என்னுடைய ஞானக் குறைவினால். நாட்டிலுள்ள வறுமையைக் கண்டு வருத்தம் அடைகிறேன். பூரண ஞானம் அடைந்தவனுக்குத் துயரம் என்பது இல்லை. முற்றிய அறிவு பெறாத ஒருவன் துயரத்தில் மூழ்கித் தத்தளிப்பவர்களைக் கண்டு அனுதாபம் இல்லாமலிருந்தால்அவன் மிருகமே ஆவான் அல்லவா? நாட்டில் நாம் காணும் கஷ்டங்கள் இருக்க வேண்டியதில்லை. அவற்றைத் தவிர்த்துக் கொள்ளாமல் இருக்கிறார்களே என்றுதுயரம் உண்டாகிறது. ஆண்டவன் ஆளும் உலகத்தில் இவ்வித வறுமை ஏன்? மக்கள் ஊமைகளாக, எலும்பும் தோலுமாக ஏன் இருக்கவேண்டும்? இவ்வாறு எண்ணி நான் துக்கத்தில் மூழ்கி நிற்கிறேன்.

**மகாத்மா காந்தி**

# சிறந்த மாணவ அணிகள் உருவாக விளையாட்டுகள் வழிவகுக்கின்றன

## வலி.கிழ.பிரதேசசபை தலைவர்தெரிவிப்பு

[கோப்பாய்]

மாணவர்கள் கல்வித்துறை ரீதியாக வளர்ச்சியை உடல் ஆரோக்கியத்தைப் பேணி, சிறந்த மாணவ அணிகள் உருவாக விளையாட்டுக்கள் உ,வுகின்றன.

இவ்வாறு, வலி கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதேச சபைத் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி சிறந்ததொரு அணிவளம் கொண்ட பாடசாலையாகத் திகழ்கிறது: விளையாட்டுத்துறைச் செயற்பாடுகளும் மிக வளர்ச்சி பெற்றுள்ளன

இன்னுமின்னும் வளர்ச்சி பெறும் வகையிலான திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

இந்தவகையில், கூடைப்பந்தாட்டத்திடலை வெகுவிரைவில் அமைத்துக் கொடுக்கவுள்ளோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கோப்பாய் கோட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம்,வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உபதலைவர் ஏ.ரவி ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ)

## நூலகக்கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய கல்விச் சீர் திருத்தத்திற்கு அமைவாகப்பொதுக்கல்வித் திட்டத்திற்கு ஏற்ப யா/ பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகக் கட்டடத்தை யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை கடந்த புதனன்று திறந்து வைத்தார். (உ)

## 29ஆம் திகதி மருதடி விநாயகர் கொடி

[மானிப்பாய்]

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 29-ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஏப்ரல் மாதம் 7-ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 13-ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 14-ஆம் திகதி புதுவருடத் தினத்தன்று ரதோற்சவமும், 15-ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (உ-120)

## பாராட்டிக் கௌரவிப்பு

[கொழும்பு]

இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கிரிக்கெட் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக கடந்த செவ்வாயன்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இக்கௌரவிப்புநிகழ்வினை இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. (செ-9)

## இளைஞர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் சுண்டுக்குளிப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட பாண்டியன்தாழ்வு இளைஞர் நல்லையா நவநிலவன் கடந்த புதனன்று, ஜே/987 கிராம அலுவலர் முன்னிலையில் 512 வது படைப்பிரிவினரால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். [உ-10]

## விளையாட்டு விழா

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு பிரதேச செயலக தடகள விளையாட்டு விழா சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நாளை பி, ப. 2.00மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், கௌரவ விருந்தினராக மானிப்பாய் பிரதேசசபை தலைவர் வெலிச்சோர் அன்ரன்ஜோன்சன் சிறப்பு வருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி. ஏ. எவ்.ஜே. ரூபசிங்கம் மற்றும் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். [உ125]

# விவாதத்திற்கு வராவிடில் உண்மைகளை உரைப்போம்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேரடி விவாதத்திற்கு முன் வராவிடில் உண்மைகளை வெளிப்படுத்துவோம்,

இவ்வாறு நகர அபிவிருத்தி நிர்மாண பொதுவசதிகள் அமைச்சர் மங்கள சமரவீர சூளுரைத்துள்ளார்.

அரசின் தலைவருக்கான வீடமைப்புத் தொகுதியில் நிர்மாணிப்புபற்றி ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

அத்துடன் ஊடகங்களுக்கு விடுத்திருந்த அறிக்கைககும் சரியான பதில் தரவில்லை.

கடந்தபல நாட்களாகவே எதிர்க்கட்சித்தலைவர் பண்டாரநாயக்கா குடும்பத்தினரைப் பற்றி ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

இவ்வாறு அமைச்சர்மங்கள சமரவீர,ரணில் விக்கிரமசிங்கவை சாடியுள்ளார். (செ)

# யாழ்ப்பாணத்தில் அரச மருந்துவிற்பனை நிலையம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கப்படவுள்ளது

இவ்விற்பனை நிலையம் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் அனுசரணையுடன் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக உணவு மருந்துப் பரிசோதகர் த.மகாதேவன் தெரிவித்துள்ளார்.

இந்த விற்பனை நிலையம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டதும் மருந்து வகைகள தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் கிடைக்குமென்றும் மேலும் தெரிவித்தார் [வ]

# ஆமர் வீதிப் பகுதியில் பத்துதமிழ்இளைஞர்கைது

(கொழும்பு)

கொழும்பு ஆமர் வீதிப் பகுதியில கடந்தபுதன் பொலிஸாரும் இராணுவத்தினரும் நடத்திய திடீர் தேடுதல் வேட்டையின் போது பத்துத் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

தெஹிவளைப் பகுதியில் தற்கொலைப் படையாளிகள் கைது செய்யப்பட்டதை அடுத்தே இச்சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம)

# ஐக்கிய தேசியக் கட்சி புலிகளுக்கு உதவிபுரிகிறது

(கொழும்பு)

இலங்கை இராணுவமயப்பட்ட நாடு எனக் கூறி ஐ.தே கட்சியினர் விடுதலைப் புலிகளின் பிரச்சாரத்திற்கு துணை போகின்றார்கள்.

இவ்வாறு தபால்தொலைத் தொடர்புகள் அமைச்சர் நிமால்சிறிபாலடிசில்வாபாராளுமன்றத்தில் பேசுகையில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

புலிகளின் பிரச்சாரங்களுக்கு துணைபோகும் ஐ-தே. கட்சி இலங்கையைஇராணுவமயப்படுத்தப்பட்ட நாடு எனக் கூறுகிறது.

இவ்வாறு அவர் குற்றஞ் சாட்டியுள்ளார் (செ)

# இரு மண்ணெய் பவுஸர்கள் யாழ். எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். கிளையின் கே. கே. எஸ். விநியோகப் பகுதிக்கு 13 ஆயிரத்து 200 லீற்றர் கொள்வனவு மண்ணெண்ணெய் பவுஸர்கள் இரண்டு விரைவில் யாழ். வந்து சேரவுள்ளதாக பெற்றோலியக்கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன:

யாழ். குடாநாட்டில் தற்போது போதியளவு எரிபொருள்கள் கையிருப்பில் உள்ளபோதும் பவுஸர்களின் பற்றாக்குறையால் எரிபொருள் விநியோகத்தில் சில வேளைகளில்ஏற்படும்தாமதம் இவை வந்து சேர்ந்ததும் நீங்கும் எனவும் அவ்வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [உ-104]

# தீவகத்தில் மேதினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள்

(ஊர்காவற்றுறை)

தீவகமட்டத்தில் கலை, விளையாட்டுநிகழ்ச்சிகளினை நடத்த ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தீவக அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மேதினத்தை முன்னிட்டு தீவுப்பகுதியில் உள்ள அமைப்புக்களிடையே கலை, விளையாட்டு சம்பந்தமானபோட்டி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதாகவும்,

இவற்றில் குதிரையோட்டம், படகோட்டம், நீச்சல் போட்டிஉட்படபல போட்டி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ 75)

# போர்வீரர்களை மக்கள் மதிக்க வேண்டும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த போர் வீரர்கள், போரில் அங்கவீனமானவர்கள், தற்பொழுது நாட்டுக்காகப் போராடும் படை வீரர்கள் மற்றும் திறமையிருந்தும் இன்னமும் படையில் சேராதிருக்கும் இளைஞர்கள் ஆகிய நான்கு பிரிவினரையும்அரசும் பொது மக்களும் மதித்து அவர்களை முதன்மைப்படுத்தவேண்டும்·

இவ்வாறு பிரதமர் ரட்ணஸ்ரீவிக்கிரமநாயக்க அண்மையில் மத்துகமவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படைவீரர்களின் ஆத்ம சாந்திக்காக அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திப்பதும், அவர்களின் உறவினர்களுக்கு உதவுதலும் கடமையாகும்.

ஊனமுற்றவர்கள், அங்கவீனர்களை பராமரிப்பதுடன் போரில் ஈடுபடும் படையினருக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பதுடன் அவர்களுக்கு வீடு,காணி,இலவச சுகாதார மருத்துவ வசதி, உயா கல்வி வசதிஎன்பவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு வாய்ந்த கடமை நமக்குண்டு என்றும் குறிப்பிட்டார். [இ]

# இஸ்ரேல் பலஸ்தீன எல்லையில் மீண்டும் பாரிய மோதல் வெடிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் மீண்டும் எல்லைப்பகுதியில் பாரிய மோதல் ஒன்று வெடித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு நாட்களுக்கு முன்னர் இஸ்ரேல் பலஸ்தீனப் பகுதியில் உள்ள தடைகளை இஸ்ரேலியர்கள் அகற்ற ஆரம்பித்தவேளை இஸ்ரேலியத் துருப்புக்களுக்கும் பலஸ்தீனத் துப்பாக்கிகாரர்களுக்கும் இடையில் மோதல் ஆரம்பித்து இரவிரவாகத் தொடர்ந்ததாக தெரியவருகிறது.

பலஸ்தீனர்களின் நடமாட்டத்திற்கு குந்தகமாகவுள்ளதும் பலஸ்தீனத்தின் நலிவுற்ற பொருளாதாரத்தை மேலும் நசுக்கவும் காரணமாக உள்ள இத்தடைகளை இஸ்ரேல் அகற்ற வேண்டும் என சர்வதேச நாடுகள் வேண்டுகோள் விடுத்திருந்தமை தெரிந்ததே.

இதுவரை இடம்பெற்ற கிளர்ச்சியின் காரணமாக 344 பலஸ்தீனர்களும் 65 இஸ்ரேலியர்களும் 13 இஸ்ரேலிய அரபுகளும் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-9

# இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றுபட வேண்டும்

## கோபி அனான் விருப்பம்

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவும், பாகிஸ்தானும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் கோபிஅனான் கேட்டுள்ளார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சுக்களை ஆரம்பித்தால் அதற்கு மத்தியஸ்தம் வகிக்கத் தான் தயார் என்றும் கோபி அனான் உறுதி அளித்துள்ளார்.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் பொதுவான முதுபெரும் பாரம்பரியம் இருப்பதால் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க முடியும் எனவும் இந்தியா வந்திருந்த வேளை ஐ.நா செயலர் கூறியுள்ளார். (உ-9)

# ஜனநாயகத்தை நோக்கிய பாதையை விட்டு இந்தோ. பின்வாங்காது

[வாஷிங்டன்]

ஜனநாயகத்தை நோக்கிய பாதையில் இருந்து இந்தோனேசியா ஒருபோதும் பின்வாங்காது என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் சிஹாப் தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர், அங்கு நடைபெற்ற மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

பல வருடங்களாக சர்வாதிகார ஆட்சி நடைபெற்ற இந்தோனேசியாவை ஸ்திரத்தன்மை மிக்க ஜனநாயக நாடாக மாற்றுவது மிகக் கடுமையான சவாலாக இருக்கும் என்பதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் அப்பணியில் இருந்து தாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். [உ-9]

## உலக தரிசனம்

# கிளர்ச்சியாளர்களால் கிராமத்தவர் படுகொலை

(அல்ஜியஸ்)

அல்ஜீரியாவில் கிளர்ச்சியாளர்களால் 26 கிராமவாசிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அல்ஜீரியாவின் வெவ்வேறு பகுதிகளிலேயே இக் கொலைகள் நிகழ்ந்துள்ளன.

இப்படுகொலைச் சம்பவத்துடன் இவ்வருடம் அல்ஜீரியாவில் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை நானூறாக அதிகரித்துள்ளது. (செ)

# குருஷேத்திரம் மீது பிரதமர் பார்வை

[புதுடில்லி]

இந்திய மண்ணின் ஓர்அங்குலத்தையேனும் அந்நியருக்கு விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் குருஷேத்திராவில் 5 கோடி ரூபா மதிப்பிலான விஞ்ஞானமையத்தை தொடக்கி வைத்துப் பேசிய வாஜ்பாய், நாங்கள் அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்புகிறோம். பிறர் மண்ணில் மீது எங்களுக்கு ஆசையில்லை.

அதேவேளை இந்திய மண்ணின் ஓரங்குலத்தையேனும் அந்நியனுக்கு விட்டுக் கொடுக்கோம் என்று உணர்ச்சி கொந்தளிக்க ஆவேசமாகப் பேசிய பிரதமர் தொடர்ந்து பேசுகையில் குருஷேத்திரப் போரையும் குருஷேத்திரத்தின் முக்கியத்துவத்தையும் தனது உரையில் சுட்டிக்காட்டி அமைதிக்கான நியாயமானதகவலை நாங்கள் இங்கிருந்து தான் எடுத்துச் செல்லப் போகிறோம் என்றார் [உ-9]

# அமெரிக்கா-ரஷ்யாவின் எதிரியல்ல நிலைப்பாட்டை விளக்க புஷ் விருப்பம்

(வாஷிங்டன்)

அமெரிக்கா, ரஷ்யாவின் எதிரியல்ல என்பதை அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்குத் தெளிவுபடுத்தப்போவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கச் செய்தித்தாளொன்றிற்கு பேட்டி அளித்த புஷ் தொடர்ந்து கூறுகையில், அமெரிக்கா தான் எதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் முகமாகவே தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத்திட்டத்தை உருவாக்குவது குறித்தும் சிந்தித்துவருகிறது. இது எந்த நாட்டிற்கும் எதிரானது அல்ல என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக விளங்குவதா இல்லையா என்பது ரஷ்யாவைப் பொறுத்த விடயம். அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள எந்த நாட்டையும் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாகக் கருத வேண்டிய தேவை தமக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். [உ-9]

## செய்திப்பரல்

★ சட்டத்துக்குப் புறம்பான வகையில் பத்திரிகையில் தனது புகைப்படம் பிரசுரிக்க இணங்கிய பிரிட்டிஷ் இராணுவ வீராங்கனையொருவர் பிரிட்டிஷ் இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

★ இளவரசர் அறக்கட்டளை என்ற பெயரில் இங்கிலாந்தில் முன்னணி அறக்கட்டளை நிலையத்தை நடத்தி வரும் சாள்ஸ் தனது பெயரில் நடிகைகளுக்கு விருது வழங்கியுள்ளார்.

★ காஷ்மீர் விடயத்தில் அரசுக்கு தெளிவான கொள்கை இல்லை என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

★ தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சியை பா.ஐ.க. உடன் இணைக்க அக்கட்சித் தலைவர் வாழப்பாடிராமமூர்த்தி முயன்று வருகின்றார். (உ-9)

# நிலநடுக்கத்திற்கு பயந்து மாடியில்இருந்துகுதித்தவர் பரிதாப மரணம்

(புதுடில்லி)

இந்தியாவின் உத்தராஞ்சல் மாநிலத்தில் கடந்த புதனன்று திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டவேளை, இந் நிலநடுக்கத்திற்குப் பயந்து மாடியிலிருந்து குதித்தவர் பரிதாபகரமாக பலியாகியுள்ளார்.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் இருந்து சில மாதங்களுக்கு முன்பு புதிதாக உருவாக்கப்பட்ட உத்தராஞ்சல் மாநிலத்தில் ஏற்பட்ட இந் நிலநடுக்கம் சாமெலி, ருத்ர பிரயாக் மற்றும் டெஷ்ரி போன்ற மாவட்டங்களில் இரண்டுமுதல் நாலுவினாடிகள் வரை நீடித்ததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# தலிபான்களைத் தண்டிக்க புதிய சட்டங்கள் இயற்றுக

## யுனெஸ்கோ பணிப்பாளர் கோருகிறார்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகள் அழிக்கப்படுகின்றமை குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள ஐ.நா கலாசார நிலையமானயுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் இக் கலாசார சீரழிவை செய்தவர்களைத் தண்டிக்கும் புதிய சர்வதேச சட்டங்கள் இயற்றப்படவேண்டுமென கோரியுள்ளார்.

இதேவேளை மத்திய ஆப்கானிஸ்தானில் அமைந்திருந்த உலகப் பிரசித்தி பெற்ற 2 புராதன புத்தர் சிலைகளும் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹக்கீல் அகமட் முஷ்டபாத். பாகிஸ்தானில்வைத்துஐ நா. செயலாளர் நாயகம் கோபி அனானிடம் கடந்த ஞாயிறன்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## ஆயுத ஊழல் விவகார எதிரொலி

# அவையில் கூச்சல்குழப்பம்வாஜ்பாய் அரசை பதவி விலகக் கோரிக்கை

(புதுடில்லி)

இந்திய இராணுவத்திற்கு ஆயுதம் வாங்கியதில் இடம்பெற்ற ஊழல் தொடர்பான விபரங்கள் வெளியாகியதை அடுத்து, நேற்று நாடாளுமன்றத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

பாராளுமன்ற அமர்வுகளை இடம்பெறவிடாது பெரும் கூச்சல் குழப்பங்களில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டதை அடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை அவையின் செயற்பாடுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம், மக்களவையில் சபாநாயகர் சமுகம் கொடுப்பதற்கு முன்னதாகவே அங்கு கூடிய ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெரும்வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டதாகவும்,

ஊழல் நிறைந்த வாஜ்பாய் அரசு ஒரு நிமிடம் கூட ஆட்சியில் இருக்கத்தகுதியற்றதென எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை,

ஆயுத ஊழலில்தொடர்புபட்டிருப்பதாக செய்திகள் வெளியானதையடுத்து உருவான பல்வேறு அழுத்தங்கள காரணமாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் பதவி விலகியமை தெரிந்ததே. (உ-9)

# கடத்தல்காரர் கைது

(கன்பரா]

சட்டவிரோதமாக நாடு கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 20 பேரை கொங்கொங், அவுஸ்திரேலியா அதிகாரிகளின் உதவியுடன் கொங்கொங் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பர்மாவின் குடியேற்றவாதிகளை கடல்மூலம் அவுஸ்திரேலியாவிற்கு கடத்திச்சென்ற இவர்கள் கொங்கொங் ஊடாக சென்றபொழுது கைது செய்யப்பட்டுள்ளனர். [உ-7]

# ஐ. நா. செயலர் பதவியைத் தொடர்ந்தும் வகிக்கஅனான் விருப்பு

ஐ நா. செயலாளர் நாயகம் கோபிஅனான் மேலும் 5 வருடம் பதவி வகிக்க வேண்டும் என்று ஆபிரிக்கர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அனானின் பதவிக்காலம் இந்த வருடத்துடன் முற்றுப் பெறுவதை, அடுத்து இதற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் டிசம்பர்மாதங்களில் நடைபெறலாம் என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நடைபெறவிருக்கும் தேர்தலில் அனான் மீண்டும் போட்டியிட்டு அவர் மேலும் 5 வருடங்கள் பதவி வகிக்க வேண்டும் என ஆபிரிக்க ஐ.நா. தூதர்கள் கோபிஅனானைக் கேட்டுள்ளனர்.

இதேவேளை, தான் தேர்தலில் போட்டியிடுவதுதொடர்பாக எதிர் வரும் மார்ச் மாதம் தீர்மானம் எடுக்கப் போவதாகவும் தான் மேலும் பதவி வகிக்கக் கோரப்பட்டால் அதற்கு சம்மதம் தெரிவிக்க விரும்புவதாகவும் கோபி அனான் தெரிவித்துள்ளார். (உ-9)

கருமம் செய ஒருவன்
கை தூவேன் என்னும்
பெருமையின்பீடுடையதுஇல் ·
குறள்

## வலம்புரி

### தமிழருக்கு பாதகம்!

1981 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டிற்குப்பின்னர் இலங்கையில் நாடளாவிய சனத்தொகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. பத்து ஆண்டுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் இக்கணிப்பீடு இனப் பிரச்சினையின் தாக்கத்தால் தட்டுண்டு போனது. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கானஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகிறது. 1991 இல் என்ன காரணத்திற்காக குடிசன மதிப்பீட்டுத் தரவுகளைத் திரட்டமுடியவில்லையோ அதே காரணம் 2001 ஆம் ஆண்டிலும் உண்டு.

மக்கள் இடம் பெயர்வு, கட்டட உடைவு, குடியிருந்த பிரதேசங்கள்காடு மேடாகப் போயுள்ளமை போன்ற பல்வேறு நிலைகளில் 2001 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டை எடுப்பதில் குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரத் திணைக்களம் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. ஓர் சீரான - சுமுகமான நிலைவட புலத்தில் ஏற்படாத போது எடுக்கப்படும் தரவுகள் எவ்வளவு தூரம் உண்மையானவையாக இருக்கப் போகிறதென்பது கேள்விக் குறியே.

கடந்த 20 வருடங்களுக்குள் பதிவுக்குள்ளேயே அடங்காத உடைந்து போன புதிய கட்டடங்கள், வீடுகள் என்று எத்தனையோ தரவுகள் இல்லாமலேயே புதிய மதிப்பீடு இடம்பெறப்போகிறது.

அது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டுக் கணிப்பீடுகள் நிச்சயம் தமிழர் சனத்தொகையில் பாரியதொரு வீழ்ச்சியை ஏற்படுத்தும். இது இன்றைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் பெரும்பான்மையினத்திற்குச் சாதகமாகவே அமையுமென்பது தெளிவு. அதே வேளை தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் ஓர் வீழ்ச்சி நிலைப் போக்கை ஏற்படுத்துவதற்குஇது அடிகோலும்.

எனவே 2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் குடிசன மதிப்பீட்டால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதக நிலைகளையும் புரிந்து கொண்டு தமிழ்க் கட்சிப்பிரதிநிதிகள்செயற்படுவது பேரினவாதத்தின் தந்திரத்திற்குமீண்டுமோர் தடவை தமிழினம் ஏமாந்து போவதைத் தடுப்பதற்கு உதவும்.

# முன்னாள் ஆணையாளர் பாலசிங்கம் காலத்தில்

# யாழ். மாநகர சபையில் பெரும் ஊழல்?

## புதிய ஆணையாளரின் மறைமுகக் கருத்து அதுவே!

**மதிப்பார்ந்த**
**ஆணையாளருக்கு**

**அன்பு வணக்கம்**

தாங்கள் 15 3.2001 திகதியிட்டு அனுப்பிய நான்கு பக்கக் கடிதம் கிடைக்கப்பெற்றோம். நன்றி. வலம்புரியுடன் தாங்கள் இப்போதாவது கடிதத் தொடர்பை ஏற்படுத்தியமைக்கு மீண்டுமொரு முறை நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

சிலவேளைகளில் நீங்கள் வலம்புரி மீது தவறான எண்ணத்தையும் நான் உங்கள் மீது தவறான எண்ணத்தையும் கொள்ளக் கூடியசந்தர்ப்பத்தை தங்களின் கடிதம் தகர்த்து விட்டதென்றே கூற வேண்டும். ஏனெனில் கடந்த 3ந் திகதி யாழ்ப்பாணமாநகர சபையில் இடம்பெற்றவிசேட கூட்டத்தில் தாங்களும், சர்வ வல்லமை பொருந்திய முதல்வரும், கௌரவ சபை உறுப்பினர்களும் வலம்புரியைக் கண்டபாட்டில் தூற்றி, தூக்கி எறிந்து ஒரு பத்திரிகை ஆசிரியரைக்கண்டபாட்டில் ஏசியவை யாவற்றையும் நான்நேரில் நின்று கேட்க முடியாது விட்டாலும் ஒலிப் பதிவு செய்யப்பட்ட கசற் மூலம் கேட்க முடிந்தது. பரவாயில்லை பொறுத்துக் கொண்டேன்.

ஆனால் தாங்கள் நீதியாக நடப்பதாக குறிப்பிட்டுள்ளீர்கள் அப்படியானால் வலம்புரிக்கு விளம்பரம் கொடுக்க வேண்டாமெனகௌரவ முதல்வர் கூறிய போது நீதி தவறாத தாங்கள் மௌனமாக இருந்தது ஏனோ என்பது தெரியவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் தங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். யாழ்ப்பாண மாநகர சபையின் விளம்பரங்களைப் போடுவதன் மூலம் தான் வலம்புரி இயங்குமென யாராவது எண்ணினால் அது அவர்களைக் கற்பித்த ஆசிரியர்களின் தவறென்றேகூற விரும்புகிறேன்.

அது மட்டுமன்றி யாழ்ப்பாண மாநகர சபையில் ஏழு வருடங்கள் இருந்து அதன் சந்து, பொந்துகள் பற்றி விரிவாகஅறிந்தவன் என்ற முறையிலும், 1994 ஆம் ஆண்டில் **''யாழ். மாநகர சபையின் செயற் திட்டங்களும் அதன் வருமான மூலங்களும்''** என்ற ஆய்வுக் கட்டுரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல் சிறப்புப் பட்டத்திற்காகச் சமர்ப்பித்தவன் என்ற முறையிலும் (யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறையில் பார்வையிட முடியும்) மாநகர சபையைப்பற்றி அதன் கருத்திட்டங்கள் பற்றி ஓரளவேனும் அறிவேன். ஆனால் ஒன்று மட்டும் உண்மை தாங்கள் யாழ். மாநகர சபையின் மின்சார பகுதியில் கடமையாற்றிய காலத்தில் நடந்தவை எதுவும் எனக்குத் தெரியாது.

சொல்லக் கேள்வி,

இவை ஒரு புறமிருக்க தாங்கள் எழுதிய கடிதத்தில் யாழ் மாநகர சபையின் சுகாதாரப் பகுதியில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள். எங்கு ஊழல் இடம்பெற்றாலும் அதனை வெளிப்படுத்த வலம்புரி என்றும் தயாராகவுள்ளது. தாங்கள் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கப்படும். ஆனால் சுகாதாரப் பகுதியில் ஊழல் என்பது தனியே அப் பகுதியை மட்டும் குறிக்காது ஏனெனில் ஆணையாளரே அனைத்து அதிகாரமும் கொண்டவர் (தங்களின் கூற்றுப்படி).

எனவே சுகாதாரப் பகுதியில் ஊழல் எனத் தாங்கள் குறிப்பிட்டுள்ளமை யாழ் மாநகர சபை முன்னாள் ஆணையாளர் வே. பொ. பாலசிங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட ஊழலையும், காலஞ் சென்ற முன்னாள் முதல்வர்கள் திருமதி சறோஜினி யோகேஸ்வரன், பொ. சிவபாலன் ஆகியோரின் காலத்தில் ஏற்பட்ட ஊழலையுமே குறிக்கும். ஏனெனில் சுகாதாரப் பகுதி நிதியைநேரடியாகக் கையாள்வதில்லை, எனவே தங்களின் கடிதத்தை முற்றாக பிரசுரிப்பதற்கு தாங்கள் குறிப்பிட்டதற்கு அமைவாக,

★ முன்னாள் ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் மேற்கொண்ட ஊழல் எவ்வளவு?

★ காலஞ்சென்ற முன்னாள் முதல்வர்கள் திருமதி சறோஜினி யோகேஸ்வரன் சிவபாலன் ஆகியோர் எவ்வளவு தொகை ஊழலுக்கு உடந்தையாக இருந்தனர்.

★ யாழ்ப்பாண சுகாதாரப் பகுதியில் கடமையாற்றும் குடும்ப நல உதவியாளர்கள் நேர்முகப் பரீட்சை மூலமா அல்லது சுயமாகவா தெரிவு செய்யப்பட்டார்கள்.

★ நேர்முகப் பரீட்சை மூலமெனில் அந்த நேர்முகப் பரீட்சையை நடத்தியவர்களின் பெயர் விபரம்.

★ குறிப்பிட்ட ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது கூட தங்களின் அகராதியில் ஊழலெனில் ஆணையாளர், கணக்காளர் ஆகியோர் பார்வையிடாமலா சம்பளக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

★ குறிப்பிட்ட கணக்காய்வு அறிக்கை போன்றவற்றை ஆதார பூர்வமாகத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வலம்புரிக்கு அனுப்பிய கடிதம் சட்டரீதியாக தாங்கள் சட்டத்தரணிக்கும் அனுப்பியுள்ளதால் வலம்புரியிலும் சட்டம் தெரிந்தவர்கள இருப்பதால் தாங்கள் அனுப்பிய கடிதம் முன்னாள் ஆணையாளரும் தற்போதைய வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான வே. பொ. பாலசிங்கத்திற்கும் தற்போதைய முதல்வர் கௌரவ ரவிராஜ் அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும் என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம. அத்துடன் தங்களின் கடிதத்தை முற்றாக பிரசுரிக்கும் பட்சத்தில் உரியவர்களால் தங்களைப் பற்றித் தரப்படும் பதிலையும் தாங்கள் கடிதத்தில் குறிப்பிட்டது போன்று பத்திரிகை தர்மத்திற்கு அமைவாக அப்படியே பிரசுரிப்பதற்கு தாங்கள் சம்மதமா என்பதையும் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன் ஆசிரியர்

**திறனாய்வுக் களம்**

# உளவியல் பாலியலை உடைத்தெறியவல்லதான

# உன்னத உறவினைச் சித்தரிக்கும் "காத்திருப்பு"

ஈழத்து சிறந்த எழுத்தாளர்கள் என்று சொல்லக்கூடிய எழுத்தாளர்கள் வரிசையிலே இன்று கோகுலா மகேந்திரன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம். போன்ற பெண் எழுத்தாளர்களும் காரை சுந்தரம்பிள்ளை செங்கையாழியான் வரிசையிலே எழத்தாளர் தெணியான் அவர்களும் தனக்கென்று ஒரு தனியான இடத்தினைச் சுவீகரித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறந்த எழுத்தாளர். இவர் குறுகிய காலங்களிலே பல நூல்கள் எழுதியுள்ளார், இவர் எழுதிய ''மரக்கொக்கு'' எனும் நாவலுக்கு 1994 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும், யாழ். இலக்கிய வட்டப் பரிசையும், வடக்கு, கிழக்கு மாகாண அரசின் பரிசையும் ஒருங்கே தனதாக்கிக் கொண்ட ஓர் சிறந்த எழுத்தாளர்.

**ஓவியம்**

இவரது நூல்களுக்கு அட்டைப்படம் ஓவியர் ரமணி அவர்களால் வரையப்படுவது வழமை. அவரது ஓவியத்தினை முகப்பில் பார்த்தவுடனேயே அந்த புத்தகத்தில் ஓர் ஈர்ப்பு சக்தி ஏற்பட்டு விடும். அது அவரது ஓவியத்திற்கான தனி மவுசு என்று தான் சொல்ல வேண்டும். இவ்வாறு அண்மையில் ஓவியர் ரமணியவர்களது ஓவியத்தோடு ஜனனமானது தான் எழுத்தாளர் தெணியான் அவர்களது 'காத்திருப்பு' நாவல்.

**வாசிப்பு ரசனை**

எழுத்தாளர் தெணியான் அவர்களது படைப்புக்களை வாசகர்களாகிய நாம் வாசிக்கத் தொடங்கினால், இறுதி வரை வாசியாது வைக்க முடியாதென்பதற்கு 'பொற்சிறையில் வாழும் புனிதர்கள்' மரக்கொக்கு போன்ற நாவல்கள் எமக்கு ஒரு தெளிவை புலப்படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை அதே போன்று இக்காத்திருப்பு அவற்றைவிட விஞ்சி நிற்கிறது என்றே சொல்ல வேண்டும்.

இக்காத்திருப்பு நாவலானது எழுத்தாளர் அவர்களது இளமைக் காலங்களிலான காலப்பகுதியைக் கொண்டது. அதாவது முப்பத்தைந்து நாற்பது வருடங்கள் பின்னோக்கிய காலப்பகுதியைக் கொண்டதாகவு வடமராட்சிப் பகுதியின் பேச்சுத் தமிழ்வாடையோடு கொண்டமைகின்றது இதில் முக்கிய பாத்திரங்களாக ...லநே க்குக் கூட்டுறவுச் சங்க விற்பனையாளன் பாத்திரத்தோடு சுப்பிரமணிய - சுப்புவும், அதே கிளையின் முகாமையாளராக நந்தகோபாலனும், சுப்புவின் மனைவியாக ஈஸ்வரி- ஈசா

→ 7ஆம் பக்கம் பார்க்க

**ஐ யோகேஸ்வரன்**
தேவரையாளி நெல்லியடி

## தவக்காலச் சிந்தனை - 18



தந்தை கடவுள் ஒருமுறை தன் வானதூதர் ஒருவரை அழைத்து இந்த பூவுலகத்திற்கு சென்று மிகவும் சிறந்த, விலைமதிப்பற்ற, உயர்ந்த பரிசுதனை என்னிடத்தில் கொண்டு வா என்று கூறி பூமிக்கு அனுப்பி வைத்தார். வானதூதர் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து பலரையும் கண்டு விசாரித்து அன்பின் சின்னம் தாஜ்மஹாலை எடுத்து சென்றார். கடவுள் அப்பரிசை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏமாற்றத்தோடு வந்த வானதூதர் சிறந்த பரிசை பற்றி ஆய்வு செய்ய ஆரம்பித்தார். இம் முறை உலக அழகியை எடுத்து சென்று கடவுளிடம் தர இறைவன் இம்முறையும் மறுதலித்து விட்டார். நொந்துபோன வானதூதர் இம்முறை ஒரு ஆலயத்திற்குள் சென்று அமர்ந்து யோசிக்க ஆரம்பித்தார். அப்பொழுது ஒரு மனிதன் தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, நொந்து, அழுது கண்ணீர் விட்டு செபம் செய்து கொண்டிருந்தார். இப்போது வானதூதருக்கு ஒரு யோசனை வந்தது தான் செய்த குற்றங்களுக்காக மனம் வருந்தி கண்ணீர் வடிக்கும் அந்தக் கண்ணீரை ஒரு சிமிழில் பிடித்து இறைவனிடம் கொண்டுவர இம்முறை இறைவன் மகிழ்ச்சியோடு மனமாற்றத்தின் வெளிப்பாடான அந்தக் கண்ணீரை மிகச் சிறந்த, உயர்ந்த, விலைமதிப்பற்ற பரிசாக ஏற்றுக் கொண்டார்.

காவலன்

எண்ணம்போல வண்ண
நகைகளை மங்கையர்
மனங்குளிர செய்து
பெற்றுக்கொள்ள
நியூ நகுலா
ஜுவல்லறி
74. கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[இ-1604]

# வன்னியில் உணவு மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

## அரச அதிபர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

வன்னிப் பகுதிக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும், மருந்துப் பொருட்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் நலன்புரி நிலையங்களிலும் குறைபாடுகள் இருந்தமைஅப்பகுதிஅரச அதிகாரியான அத்தியவசிய ஆணையாளர்நாயகம்சிறிபதி சூரியஆராட்சியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்;

அத்தியவசிய ஆணையாளர் நாயகத்தின்தலைமையில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். அரச அதிகாரி க.சண்முகநாதன் மன்னார் அரசஅதிபர் எஸ்.விஸ்வலிங்கம், கிளிநொச்சி அரசஅதிபர் ஐயாத்துரை முல்லைத்தீவு அரசஅதிபர்எஸ் சுந்தரம், வவுனியா அரச அதிபர் கே கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வன்னிப் பகுதியில் உலர் உணவு நிவாரணப் பொருட்கள் போதியளவில் இல்லையென்றும் இதனால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நெல்லைக் கொள்வனவு செய்ய அனுமதி தருவதுடன் அதற்குரிய நிதியையும் அரசு தரவேண்டுமென்றும் அரச அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

வன்னிப் பகுதியில் உள்ள நெல்லினை நாம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவருவதற்கும் நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளனர்; இதுதொடர்பாக பரிசீலிப்பதாக அத்தியவசியசேவை ஆணையாளர் நாயகம் உறுதி அளித்துள்ளார்; (வ)

# தொட்டியில் வீழ்ந்து மரணம்

[யாழ்ப்பாணம்]

குளித்துக்கொண்டிருந்த போது வலிப்பு ஏற்பட்டு, தண்ணீர் தொட்டியில் தவறி வீழ்ந்து இளம் யுவதி, நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சவகச்சேரியிலிருந்து இடம் பெயர்ந்து கொக்குவில் மேற்கில் தற்காலிகமாக வசிக்கும் பத்மநாதன் பத்மாவதி (வயது 24) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்; (இ-02,06)

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1605)

# ஏப்ரலில் நேர்முகத் தேர்வு

(யழ்ப்பாணம்)

கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஆசிரிய மாணவர்களை உள்வாங்குவதற்கான நேர்முகப் பரீட்சை ஏப்ரல் மாதம் நடுப்பகுதியளவில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி தெரிவித்தார்;

இரு பயிற்சிக் கலாசாலைகளுக்கும் சுமாரா ஆயிரம் விண்ணப்பங்கள் இதுவரைகிடைத்துள்ளதாகவும் இக் கலாசாலைகளில் தற்பொழுது இடப்பற்றாக்குறை நிலவுவதால் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களையே உள்வாங்கவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [உ-2]

# வடபகுதியில் ஆளணி பற்றாக்குறை அபிவிருத்தி திட்டங்கள் தாமதம்

## அரசஅதிபர்கள் கூட்டாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் போதியளவு தொழில் நுட்பவியலாளர் மற்றும் ஊழியர்கள் இன்மையால் அபிவிருத்தித் திட்டங்களை குறுகியகாலத்தில்நிறைவேற்ற முடியவில்லை என்று வடபகுதிஅரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண புனர்வாழ்வு புனர்அமைப்புஅதிகாரசபைத் தலைவர் என் வாமதேவா தலைமையில் நேற்றுநடைபெற்ற அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்திலேயே அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்டது.

புனர்வாழ்வு புனர்அமைப்பு அதிகாரசபைத் தலைவர் என்.வாமதேவா கடந்தவருடம் மேற்கொள்ளப்பட்ட புனர் அமைப்பு வேலைகள் குறிப்பிட்டகாலத்தில் ஏன் நடைபெறவில்லை என்று எழுப்பியகேள்விக்கே அரச அதிபர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வடபகுதியில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை கூடியவிரைவில் நிவர்த்திசெய்வதாகவும் என்.வாமதேவா அரசஅதிபரிடம் கூறினார். (வ)

### பிரதிப்---

பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீதியமைச்சர் பட்டிவீரகோன் கடந்த வாரம பாராளுமன்றில் வரவு செலவுத்திட்ட விவாதம் மீதான உரையின் போது 150 மில்லியன் ரூபா ஆயுதக் கொள்வனவு மோசடியில் பல முக்கிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்களென தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. [இ]

### 21 அமைப்புக்கள்---

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரித்தானிய உள்துறை அமைச்சு மீது வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக அறிவித்துள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்துறை அமைச்சு மீது வழக்குத்தாக்கல் செய்து அதில் தோற்றுப் போனால் தனிநபர் ஆணைக்குழு ஒன்றில் மனுச் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது; [வ]

### ஐஸ்வந்சிங்---

ளதாகதூதரகஅதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனும் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் நடத்திய பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய அம்சங்கள் பற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கிடம் எடுத்துக்கூறியுள்ளார்;

இதை செவிமடுத்த வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் நோர்வேத் தூதுவர் எரிக்சோல்ஹெய்மிடம் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு இந்தியா எப்போதும் ஆதரவுவழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்;

இதேவேளை இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தையை எவ்வகையிலும் பாதிக்காதென்று நோர்வே தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்,

இது இவ்வாறு இருக்க நோர்வேயின்இலங்கைக்கான தூதுவர் யோன்வெஸ்பேர்க்கும் இந்தியா சென்றிருப்பதும் பேச்சுவார்த்தையில் முக்கிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை எங்கே, எத் திகதியில் ஆரம்பிப்பது என்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதாகவும் பேச்சுவார்த்தை வெகு விரைவில் ஆரம்பமாகலாம் என்றும் நோர்வே, இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

### விடுதலைப்.--

ஆகிய நான்கு விவசாயிகளையும் விடுதலைப்புலிகள் உறவினர்களிடம்சேர்ப்பதற்குவசதியாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்;

இதேவேளை இன்று மேற்படி விவசாயிகள் அனுராதபுரம் பதவியாவிலுள்ள அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவரெனசெஞ்சிலுவைச்சங்கபேச்சாளர்ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்துள்ளார். கடந்த மாதம் 19ம் திகதி வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்த சர்வ மதக் குழுவினரில் ஒருவரானவவுனியாபௌத்த விகாராபதி விமல சாரதேரர் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு கோரியிருந்தார். புலிகள் அக் கோரிக்கைக்கமைய நல்லெண்ண அடிப்படையில் மீனவர்களை கடந்த2ம் திகதியும், விவசாயிகளை நேற்று முன்தினமும் விடுவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். [இ]

### 10 தமிழ்---

திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது

தமிழீழ விடுதலைப்புலிகளை பிரித்தானியா தடைசெய்த கையோடு பிரிட்டிஸ் பிரதமர் ரொனிபிளேயருக்கு மகஜர்சமர்ப்பிப்பதற்கு பத்து தமிழ்க் கட்சித் தலைவர்கள் கேட்ட போது கொழும்பில் உள்ள பிரிட்டிஸ் தூதரகம் அனுமதி மறுத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. [ம[

### கல்வி---

செயலகம்மற்றும் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட தலைமைச் செயலகம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து குடா நாட்டு நிலைவரங்களைக் கேட்டறிந்து கொண்டனர்;

இப் பத்திரிகையாளர் குழுவுடனான சந்திப்பில் ஈ.பி.டி.பி. பிரமுகர்களான க.மணிபல்லவராஜன், ந.திரிலோகநாதன், வெலிச்சோர் அன்ரன் மற்றும் பூ குணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

# வடக்கு கிழக்கு பாடசாலைகளில் விடுதிக்கு 10 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில்உள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்காக பத்துக் கோடிரூபாவை ஒதுக்கியுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிறேம்ஜயந்த பாராளுமன்றில்பேசுகையில் தெரிவித்துள்ளார்.

வடக்குகிழக்கு மாகாணத்தில் மேலதிக கல்வி அதிகாரிகளை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது;

இம்மாதம் 20ம்திகதிவடக்குகிழக்கிலுள்ள வலயக்கல்விப் பணிப்பாளர்களை சந்தித்து வடக்குகிழக்குமாகாண கல்வி அபிவிருத்தி குறித்தும் பாடசாலைக் கட்டடங்கள் நிர்மாணிப்பதுகுறித்தும்பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இதற்கு வடக்குகிழக்கு மாகாண எம்.பிக்களும் தங்களது ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் கல்விஅமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# உரும்பிராயில் உதை பந்தாட்டம்

உரும்பிராய்இந்துக்கல் லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று றோயல் வி. கழகம் (ஊரெழு) எதிர்சென் மேரிஸ் வி. கழகம் (நாவாந்துறை) சென் றோக்ஸ் வி.கழகம் (குருநகர்)எதிர்பொற்பதி.வி. கழகம் (கொக்குவில்) ஆகியன மோதவுள்ளன;

போட்டிகள் மாலை 4மணிக்கு ஆரம்பமாகும்;

# உரும்பிராய் இந்துவில் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரிஉயர்தரவகுப்பு மாணர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுஇன்றுகாலை9மணிக்கு உயர்தரமாணவர் மன்றத் தலைவர் சுரேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில்கல்லூரிஅதிபர் அ.ஈஸ்வரநாதன் வாழ்த்துரையையும் யாழ்பல்கலைக் கழக வணிகத்துறைத்தலைவர் க.தேவராஜா பிரதமவிருந்தினர் உரையையும் வழங்குவர். (ந)

### முகாமைத்துவ....

இவ் வகுப்புகள் இன்று மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால், சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு இயக்குநர் ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார்; (உ-6)

வேலையற்ற பட்டதாரிகள் சங்க
பொதுக்கூட்டம்

இடம்: புதியஉயர்கல்வி கல்லூரி ஆரிய குளம்சந்தி
காலம்: 19.03.2001 திங்கட்கிழமை காலை
10-00 மணி
விடயம்: வேலைவாய்ப்பு சம்பந்தமாக

வே மணிமாறன்
யாழ்மாவட்டவே.அ.ப.சங்கம் தலைவர்
[கி-1612]

பிரிவுத்துயர் பகிர்வு

சிவசுப்பிரமணியக்குருக்கள் சகுந்தராம்பாள்

ஓய்வுபெற்ற அதிபர் சிவசுப்பிரமணியக்குருக்களின் பாரியார் சகுந்தராம்பாள் கொழும்பில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கனத்தை மயானத்தில் இன்று நடைபெறும்;

தகவல்: குஞ்சிதபாதக்குருக்கள்

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;